[1974 மார்ச் 22

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே, மேல்விஷாரத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய பரீட்சார்த்த திட்டம் என்ற முறையில் தண்ணீர் வழங்கப்படுவதே தவிர, தொடர்ந்து அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

The pilot water supply has been effected from November 1972. The remaining works such as ground level service Reservoir II of headworks are in progress.

என்று தெரிவித்திருக்கிறார்கள், தொடர்ந்து அந்தப் பணி முறைப்படி நிறைவேற்றப்படும். அதற்குப் பிறகுதான் மேல் விஷாரத்திற்குத் தகுந்த பலன் கிடைக்கும். இராணிப்பேட்டை, ஆற்காடு பற்றி இதில் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

* 559 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வேலை பூர்த்தியாகிவிட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் செலவாகியுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இரயில்வே பாதையின் குறுக்கே ஒரு இடத்தில் வினியோகக் குழாய் பதிக்கும் பணி தவிர, குளித்தலை நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன.

(இ) டிசம்பர் 1973 முடிய இத் திட்டத்திற்குச் செலவான ரூபாய் 10,36,514.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வேலைகள் முடிந்ததும் இன்னும் பொது மக்களுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப்பட வில்லை. அதற்கு என்ன காரணம்? அதைத் துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒப்படைக் கப்பட்ட வேலைகள் முடிந்து நகரசபையில்கூட பெரும் பகுதி

1974 மார்ச் 22]

ஒப்படைக்கப்பட்டது. இரயில்வே பாதையின் குறுக்கே குழாய் பதிக்கப்பட வேண்டிய பணி முடிந்தவுடன் வழங்கப்படும் என்று கருதுகிறேன். ஏனென்றால் அதற்குக் கிடைக்க வேண்டிய அனுமதி கிடைத்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் இலங்கை அகதிகள்.

* **560 வினு—திரு. கு. அ. பொம்மன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் இலங்கை அகதிகளுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ள தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர் களின் நலனைக் கவனிக்க மாவட்ட மட்டத்தில் குழு அமைக்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சேரன்பாடி என்ற பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் பல பேர் இருந்தாலும், ஒருவருக்குத்தான் அங்கே வேலை தருகிறார்கள். அதனால் பெரிய குடும்பமாக இருப்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் எனவே, இதை அரசு கவனித்து வேலை செய்யக்கூடிய அனைவருக்கும் அங்கே வேலை வாங்கித் தர ஏற்பாடு செய்யுமா? அதே நேரத்தில் அங்குள்ள அதிகாரிகள், குறிப்பாகக் காட்டிலாக்கா அதிகாரிகள் தமிழர்களாக இருக்கும் அளவிற்கு அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, ஏறத்தாழ 276 குடும்பங்கள் அங்கே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 68 அகதிகள் பணியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைச் சரியான முறையில் கவனித்துக்கொள்ளவும், அவர்களது நலன்களைப் பராமரித்துக் கொள்ளவும் ஒரு குழு ஏற்கனவே அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அவர்களது நலன்களையும் கவனித்து, அந்தத் திட்டத்தையும் முறையாகச் செயல்படுத்திச் செய்து வருகிறது. ஏதாவது குறையிருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.